12.12.2017

தினமலர்

## மீண்டும் வடகிழக்கு பருவமழை: நாளை மறுநாள் முதல் துவங்கும்

இரண்டு வார இடைவெளிக்கு பின், தமிழக கடலோர பகுதிகளில், நாளை மறுநாள் முதல், வடகிழக்கு பருவமழை மிதமாக பெய்யலாம் என, வானிலை மையம் கணித்துள்ளது.

தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை, அக்., 27ல் துவங்கியது; அக்., 29 முதல், தீவிர மழையாக பெய்தது.நவ .,1 மற்றும், 2ல், சென்னை மற்றும் வடக்கு கடலோர மாவட்டங்களில், தீவிரமாக பெய்த தொடர் மழையால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களின் சில பகுதிகளில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதையடுத்து, மிதமாக பெய்த மழை, நவ., 29 மற்றும், 30ல், 'ஒக்கி' புயலாக மாறி, கன்னியாகுமரி கடலோர பகுதிகளை சூறையாடியதுஇதில் ., நுாற்றுக்கணக்கான மீனவர்கள் புயலில் சிக்கி, கடலுக்குள் மாயமாகி விட்டனர் அவர்களின் கதி . தொடர்ந்து .என்னவென்றே தெரியாத நிலை உள்ளது, குஜராத் வரை, ஒக்கி புயல் சுழன்று, சூரத்தில் கரை கடந்ததுபின் ., இரண்டு வாரங்களாக, தமிழகத்தில் குறிப்பிடும்படியாக மழை பெய்யவில்லைதென் மாவட்டங்களில் ., சில இடங்களில் மட்டும், 10 செ.மீ., வரை மழை பெய்ததுஇந்நிலையில் ., மீண்டும், நாளை மறுநாள் முதல், தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு கடலோர மாவட்டங்களில், மிதமான மழை பெய்யலாம் என, வானிலை மையம் கணித்துள்ளது கன்னியாகுமரிக்கு தென் . கிழக்கில், மேல் அடுக்கு சுழற்சி உள்ளதால், தென் மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்யலாம் என, கணிக்கப்பட்டுள்ளது.

- நமது நிருபர் –

## மணிமுத்தாறு, குதிரையாறு அணைகளை திறக்க உத்தரவு

சென்னைதிருநெல்வேலி மாவட்டம் :, மணிமுத்தாறு மற்றும் திண்டுக்கல் மாவட்டம், குதிரையாறு அணைகளில் இருந்து, பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட, முதல்வர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

• திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் இருந்து, வரும், 20 முதல், தண்ணீர் திறந்து விட, முதல்வர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இதனால், திருநெல்வேலி, துாத்துக்குடி மாவட்டங்களில் உள்ள, 22 ஆயிரத்து, 852 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்

• திண்டுக்கல் மாவட்டம், குதிரையாறு அணையிலிருந்து, பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள், பயன்பெறும் வகையிலும், குடிநீர் தேவைக்காகவும், டிச., 14 முதல், தண்ணீர் திறந்து விட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இதனால், திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்களில் உள்ள, 6,113 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

## கையளவு நிலத்தில் கடலளவு லாபம்: செங்கரும்பு செண்டு மல்லி மஞ்சள்

தமிழகத்தில் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் உள்ள சிறு, குறு விவசாயிகள் அதிகளவில் உள்ளனர் பலர் விவசாயத்தில் ஈடுபட்டு நஷ்டம் அடைவதால் நிலத்தை தரிசாக . ஒரு ஏக்கரோ .வைத்துள்ளனர், அரை ஏக்கரோ திட்டமிட்டு செயல்பட்டால் லாபம் அள்ளலாம் என சாதித்து வருகிறார் சிவகங்கை மாவட்டம் சிவல்பட்டி விவசாயி டி.மச்சக்காளை.

இவர் 65 சென்ட் நிலத்தை பகுதி, பகுதியாக பிரித்து கிணற்று பாசனம் மூலம் செங்கரும்பு, செண்டுமல்லி, மஞ்சள் என சாகுபடி செய்துள்ளார் சொட்டுநீர் பாசனம் . முறையில் அல்லாமல், நீர் மேலாண்மையை முறையாக கடைபிடித்து வருகிறார் . வறட்சியால் சிவல்பட்டியில் பலரது நிலங்கள் தரிசாக விடப்பட்ட நிலையில், மச்சக்காளை நிலம் பசுமையாக உள்ளது.

### 30 சென்டில் செங்கரும்பு

அவர் கூறியதாவது செங்கரும்பு :30 சென்டில் சாகுபடி செய்துள்ளேன் நான்கு முறை . உழவு செய்து ஒன்றரை அடி இடைவெளியில் முக்கால்அடி உயரம், ஓரடி அகலத்தில்

நீளமான பாத்தி அமைக்க வேண்டும் பாத்திகளில் ஓரடி இடைவெளியில் சிறிய குழி . பறித்து விதை

கரனைகளை நட வேண்டும் .30 சென்டிற்கு 5 ஆயிரம் விதை கரனை தேவை .

ஒரு மாத .தொடர்ந்து பத்து நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விட்டால் போதும் இடைவெளியில் நான்கு முறை உரமிட வேண்டும் ஐம்பதாவது நாள் களை எடுத்து . மூன்றாவது மாதத்தில் கரும்பின் கீழ்புற தோகைகளை .மண் அணைக்க வேண்டும் பூச்சித் தாக்குதலை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்து .அகற்ற வேண்டும் .தெளிக்கலாம்

**ரூ.30 ஆயிரம் வருவாய்**

ஒன்பது மாதங்களில் கரும்பு அறுவடைக்கு தயாராகி விடும் பொங்கலுக்கு அறுவடை . .செய்வோம்30 சென்ட்டில் குறைந்தது 600 முதல் 800 கட்டுகள் கிடைக்கும் ஒரு கட்டு . 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்கப்படும்பாத்தி அமைத்தல் ., கரனை நடவு, தோகை வெட்டுதல், உரம் போன்றவைக்காக 30 ஆயிரம் ரூபாய் செலவாகும் .இந்த ஆண்டு குறைவான அளவே சாகுபடி செய்துள்ளதால் நல்ல விலை கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் குறைந்தது .30 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்.

**செண்டுமல்லி சாகுபடி**

செண்டுமல்லி 25 சென்டில் சாகுபடி செய்துள்ளேன் ஒரு செடி .5 ரூபாய் வீதம் 3,500 செடிகளை ஓசூரில் வாங்கி நடவு செய்தேன்தவிர உரம் ., பூச்சிக்கொல்லி மருந்துக்கு 4,000 ரூபாய் செலவு செய்துள்ளேன் நான்கு நாட்களுக்கு ஒருமுறை .50 கிலோ வரை கிடைக்கிறது கிலோ .மதுரை பூ மார்க்கெட்டில் விற்பனை செய்கிறோம் .20 முதல் 50 ரூபாய் வரை விற்கப்படுகிறதுசில நேரங்களில் உள்ளூர் வியாபா .ரிகளும் வாங்கிச் செல்கின்றனர் செலவு போக .25 சென்ட்டில் 50 நாட்களில் 20 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்.

**புஞ்சையில் மஞ்சள்**

பொங்கல் பண்டிகைக்கு மஞ்சள் கொத்துக்காக பத்து சென்டில் மஞ்சள் பயிரிட்டுள்ளேன்பாத்தி அமைத்தல் ., கிழங்கு, நடவு, உரத்திற்கு 3,000 ரூபாய் செலவழித்துள்ளேன் இதில் .10 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும், என்றார் .'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு,' என்பர் கையளவு நிலத்தில் கடலளவு லாபம் ஈட்டும் . மச்சக்காளை போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய சில விவசாயிகளின் சாதனை

நிலம் இருந்தும் .தொடர வேண்டும், வாய்ப்பு இருந்தும் பயன்படுத்த இயலாத விவசாயிகள் பலருக்கு மச்சக்காளை சாதனை முன் மாதிரியாக அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. தொடர்புக்கு 97511 38619. **- இஜெகநாதன்.,** சிவகங்கை.

தினமணி

## தோட்டக்கலைப் பயிர்களுக்கு இடுபொருள் மானியம் உயர்த்தி அறிவிப்பு



ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்ட தோட்டக்கலைப் பயிர்களுக்கான இடுபொருள் மானியத்தை தமிழக அரசு உயர்த்தி அறிவித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி வெளியிட்ட அறிக்கை:- ஒக்கி புயல் கன்னியாகுமரி மாவட்ட தோட்டக் கலைப் பயிர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. முதல் கட்ட ஆய்வில், 3 ஆயிரத்து 623 ஹெக்டேர் பரப்பளவுக்கும் அதிகமாக தோட்டக்கலைப் பயிர்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. குறிப்பாக, வாழை 1900 ஹெக்டேர் பரப்பிலும், ரப்பர் மரங்கள் சுமார் 1400 ஹெக்டேர் பரப்பிலும் சேதம் அடைந்துள்ளன. பயிர் சேத மதிப்பீட்டைக் கணக்கீடு செய்வதற்காக தோட்டக்கலைத் துறை மூலம் 90 குழுக்கள் அமைக்கப்பட்டு, கணக்கிடும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. வாழை பயிருக்கு சேத மதிப்பீடு 33 சதவீதத்துக்கும் கூடுதலாக இருந்தால், இடுபொருள் மானியமாக மாநில பேரிடர்

நிவாரண நிதியிலிருந்து ஒரு ஹெக்டேருக்கு ரூ.13,500 மட்டும் தற்போது வழங்கப்படுகிறது.

சிறப்பு உதவித் திட்டம்: இந்த நிலையில், ஓக்கி புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்ட வாழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், வாழை சாகுபடியை மீண்டும் அவர்கள் தொடரும் வகையிலும் சிறப்பு வாழ்வாதாரத் தொகுப்பு உதவித் திட்டத்தைச் செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, மீண்டும் வாழை நடவு செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு உரம், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் உள்ளிட்ட இடுபொருள்களுக்கான செலவுத் தொகைக்காக, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இப்போது வழங்கப்படும் ரூ. 13,500 ரூபாய்க்கு கூடுதலாக 40 சதவீத மானியமாக அளிக்கப்படும். இதைக் கொண்டு சாதாரண முறையில் சாகுபடி செய்வதற்கு ஹெக்டேருக்கு ரூ.35 ஆயிரம் வழங்கப்படும். திசு வளர்ப்பு மூலம் சாகுபடி செய்வதற்கு ஹெக்டேருக்கு ரூ.50 ஆயிரம் மானியமாக வழங்கப்படும்.

இதில் முதலாண்டு சாதாரண முறை சாகுபடிக்கு ரூ.39 ஆயிரத்து 750 மானியமும், திசு வளர்ப்பு சாகுபடிக்கு ரூ.51 ஆயிரமும் வழங்கப்படும். ஆக மொத்தம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.48 ஆயிரத்து 500 முதல் ரூ.63 ஆயிரத்து 500 வரை (வழக்கமாக அளிக்கப்படும் 13,500 உடன் கூடுதலாக 40 சதவீதம் மானியம்) வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ரப்பர் விவசாயிகளுக்கு ரூ. 50 ஆயிரம்: அதுபோல, புயலால் பாதிக்கப்பட்ட ரப்பர் மர விவசாயிகளின் வாழ்வாதரத்தைப் பாதுகாக்கவும் சிறப்பு வாழ்வாதாரத் தொகுப்பு உதவித் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, பாதிக்கப்பட்ட ரப்பர் மரத் தோட்டங்களில் புதிதாக ரப்பர் மரம் பயிரிட விரும்பும் விவசாயிகள், ரப்பர் மர நடவு செய்து, ஊடுபயிராக வாழை அல்லது அன்னாசி சாகுபடி செய்வதற்கு ஹெக்டேருக்கு ஆகக் கூடிய முழு செலவான ரூ.50 ஆயிரத்தையும் தமிழக அரசு மானியமாக வழங்கும்.

அத்துடன், ரப்பர் மரத் தோட்டங்களில் தேனீ வளர்ப்பு மூலம் விவசாயிகளுக்கு கூடுதலாகக் கிடைக்கும் வருமானமும் புயலால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த இழப்பை ஈடு செய்யும் வகையில் புதிய தேனீ வளர்ப்பு திட்டமும் செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, ரப்பர் தோட்டங்களில் தேனீ வளர்ப்புக்கு, ஒரு ஹெக்டேர் பரப்புக்கு செலவாகும் ரூ.32 ஆயிரம் மதிப்பிலான 20 தேனீ பெட்டிகள்

வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆக மொத்தம், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட ரப்பர் மர விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.1 லட்சம் நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

கிராம்பு விவசாயிகளுக்கு ரூ. 10 ஆயிரம் கூடுதல் மானியம்: இது தவிர, இந்த மாவட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த கிராம்பு பயிர்கள் 43 ஹெக்டோர் பரப்பளவுக்குபாதிக்கப்பட்டுள்ளது. இந்த கிராம்பு விவசாயிகள் புதிதாக கிராம்பு நடவு செய்ய மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் ஹெக்டேருக்கு ரூ.18 ஆயிரம் இடுபொருள் மானிய உதவியுடன், கூடுதலாக ஹெக்டேருக்கு ரூ.10 ஆயிரம் மானியமும் சேர்த்து மொத்தம் ஹெக்டேருக்கு ரூ.28 ஆயிரம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என முதல்வர் தெரிவித்துள்ளார்.

## குதிரையாறு, மணிமுத்தாறு அணைகளிலிருந்து நீர் திறப்பு: தமிழக அரசு உத்தரவு

திண்டுக்கல் மாவட்டம் குதிரையாறு, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு அணைகளிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசு திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:- திண்டுக்கல் மாவட்டம் குதிரையாறு பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்கள் பயன்பெறவும், குடிநீர் மற்றும் சமுதாய பயன்பாட்டுக்கும் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அதனை ஏற்று, வரும் 14- ஆம் தேதிமுதல் தண்ணீர் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 6113.86 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**மணிமுத்தாறு அணை...** விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையிலிருந்து மணிமுத்தாறு பிரதானக் கால்வாயின் 1 ஆவது முதல் 4 ஆவது பிரிவுகளின் கீழ் உள்ள பாசன நிலங்களுக்கு வரும் 20-ஆம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்படும். இதன் மூலம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், நாங்குநேரி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களில் உள்ள 22 ஆயிரத்து 852 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

# கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட ரப்பர் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.1 லட்சம்: முதல்வர் கே.பழனிசாமி அறிவிப்பு



கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட ரப்பர் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.1 லட்சம், வாழைக்கு ரூ.63,500 வழங்கப்படும் என்று முதல்வர் கே.பழனிசாமி அறிவித்துள்ளார்.

வங்கக் கடலில் உருவான 'ஒக்கி' புயலால் கன்னியாகுமரி மாவட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டது. தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களிலும் பாதிப்பு ஏற்பட்டது. புயல் பாதிப்புகள் குறித்து சமீபத்தில் ஆய்வு நடத்திய முதல்வர் கே.பழனிசாமி, கூடுதல் அதிகாரிகளை கன்னியாகுமரி மாவட்டத்துக்கு அனுப்பினார். புயல் பாதிப்புகளை கணக்கிட்டு டிச.11-ம் தேதிக்குள் அறிக்கை அளிக்கவும் உத்தரவிட்டார்.

கணக்கெடுப்புப் பணிகள் நடந்து வரும் நிலையில், பயிர் பாதிப்புகளுக்கான நிவாரணத் தொகைகளை முதல்வர் கே.பழனிசாமி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை: கன்னியாகுமரியில் தோட்டக்கலை பயிர்களுக்கு ‘ஒக்கி’ புயல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. முதல்கட்ட ஆய்வில் 3,623 ஹெக்டேருக்கும் அதிகமாக சேதமடைந்துள்ளதாக தெரிகிறது. குறிப்பாக, 1,900 ஹெக்டேர் வாழை, 2,400 ஹெக்டேர் ரப்பர் மரங்கள் சேதம் அடைந்துள்ளன. பயிர்ச் சேத மதிப்பீட்டை கணக் கீடு செய்ய தோட்டக்கலைத் துறை மூலம் 90 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**வாழைக்கு ரூ.63,500**

வாழை பயிர்கள் சேதம் 33 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தால் இடுபொருள் மானியமாக ஹெக்டேருக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தற்போது ரூ.13,500 வழங்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டி, செவ்வாழை, ரசகதலி, நேந்திரன் போன்ற வாழை ரகங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், வாழை சாகுபடியை தொடர சிறப்பு வாழ்வாதார தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
அதன்படி, மீண்டும் வாழை நடவு செய்ய தொழு உரம், உயிர் உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கான செலவுக்கு, ரூ.13,500 தொகையுடன் கூடுதலாக சாதாரண முறையில் சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு ரூ.35 ஆயிரமும், திசு வளர்ப்பு மூலம் சாகுபடி செய்ய ரூ.50 ஆயிரமும் மானியமாக வழங்கப்படும். இதில் முதலாண்டு சாதாரண முறைக்கு ரூ.39,750, திசு வளர்ப்பு சாகுபடிக்கு ரூ.51 ஆயிரமும் வழங்கப்படும். இந்த வகையில், கன்னியாகுமரியில் வாழை விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.48,500 முதல் ரூ.63,500 வரை வழங்கப்படும்.

அதேபோல, 33 சதவீதத்துக்கு மேல் பாதிக்கப்பட்ட ரப்பர் மரங்களுக்கு தற்போது ஹெக்டேருக்கு ரூ.18 ஆயிரம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் நலனை கருத்தில்கொண்டு, ரப்பர் சாகுபடிக்கு சிறப்பு வாழ்வாதார தொகுப்பு உதவி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் ரப்பர் பயிரிட விரும்பும் விவசாயிகள், ஊடுபயிராக வாழை அல்லது அன்னாசி சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு ஆகும் முழு செலவான ரூ.50 ஆயிரத்தையும் தமிழக அரசு மானியமாக வழங்கும்.

அத்துடன், ரப்பர் தோட்டங்களில் தேனீ வளர்க்கும் விவசாயிகளுக்கு புதிய தேனீ வளர்ப்புத் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. ரப்பர் தோட்டங்களில் தேனீ வளர்ப்புக்கு ஹெக்டேருக்கு ஆகும் ரூ.32 ஆயிரம் மதிப்பிலான 20 தேனீ

பெட்டிகளுடன் கூடிய தேனீ குடும்பங்கள் வழங்கப்படும். இதன்படி, புயலால் பாதிக்கப்பட்ட ரப்பர் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.1 லட்சம் நிதி வழங்கப்படும்.

**கிராம்பு விவசாயிகள்**

மேலும், வழக்கமாக 33 சதவீதம் பாதிக்கப்பட்ட கிராம்பு பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.18 ஆயிரம் வழங்கப்படும். தற்போது, கூடுதலாக ரூ.10 ஆயிரம் சேர்த்து ரூ.28 ஆயிரம் வழங்கப்படும். இத்துடன் 280 ஹெக்டேரில் மரவள்ளி, மிளகு, பலா உள்ளிட்ட பிற தோட்டக்கலை பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பயிர்களுக்கும், இதர வேளாண் பயிர்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து உரிய நிவாரணம் வழங்கப்படும். இந்த உதவிகளை உடனடியாக வழங்கவும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

**தமிழகம், புதுவையில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியால் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு**

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:

குமரி கடல் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவி வருகிறது. அதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை மற்றும் காலை நேரங்களில் சில இடங்களில் பனிப்பொழிவு இருக்கக்கூடும்.

திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் எங்கும் மழை பதிவாகவில்லை.

இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.